**போபே போத்தல பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 04 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 11 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 29 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து போபே போத்தல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 3,126,348 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி உள்ளவாறு மின்சார உபகரண இருப்பில் அடங்கியுள்ள 10 விடயங்களின் பெறுமதிகளை கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மின்சார உபகரண இருப்பு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | மீளாய்வாண்டின் போது வீதவரி முற்பெறுவனவு ரூபா 106,676 தொகை மற்றும் கடை வாடகை ரூபா 650 தொகை தொடர்பாக கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியான மீதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 07 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 7,153,999 இற்கான வித்தியாசம் ஒன்று காட்டப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்டகாலம் முதல் காணப்படும் சமமின்மைகள் என்பதால் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறை அல்லாத சொத்துக் கணக்கின் மீதி மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை கணக்கு மீதியிடையே ரூபா 79,058 ற்கான வித்தியாசம் காணப்பட்டது. | சரியான மீதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 761,993 தொகைக்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியை இனங்கண்டு சீராக்கல் செய்து கணக்குகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 வருடங்கள் முதல் 11 வருடங்கள் வரையான கால வீச்சில் அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 3,541,440 தொகைக்கான 05 கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்கு வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மஹ ஹபுகல மற்றும் வெலிபிடி மோதர இறைச்சிக் கடைகளிலிருந்து பெற வேண்டிய இறைச்சிக் கடை அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 1,031,303 தொகையாக காணப்பட்டது. | பெறவேண்டிய கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்கு வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) பாராளுமன்றச் சட்டம் | | | |
| 1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 182 | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 858,816 தொகைக்கான பெறவேண்டிய வீதி விளக்கு உதவி மீதி பதிவழிக்கப்பட்டுள்ளது. | தேவையான அங்கீகாரம் பெற்ற பின்னர் கணக்குகளில் சீராக்கல்கள் மேற்கொள்ள வேண்டும். | அங்கீகாரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக் கணித்துள்ள நபர்கள் தொடர் பான அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) விதி 59 | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கைத்தொழில்கள் தொடர்பான அட்டவணை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) விதி 69 | காணி விற்பனவு மீதான வரி தொடர்பான பதிவேடு ஒன்று பீஎஸ் 26 டீ படிவத்தின் படி பேணப்பட்டு வந்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) விதி 218 | சபைக்கு சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டடங்களுக்கு வருடாந்தம் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகொ/2010/01 இலக்கங் கொண்டு தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 5 பந்தி | லபுதுவ வர்த்தக கடைத்தொகுதியின் 06 கடைகளின் உடன்படிக்கைகள் 2013 ஆண்டின் பின்னர் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 40,239,972 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 36,291,212 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2019 மதிப்பீட்டு வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பீட்டு வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்க ப்பட்ட வருமானம | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 17,527,000 | 17,885,826 | 10,938,119 | 48,922,922 | 13,969,000 | 13,678,198 | 10,659,166 | 41,858,398 |
| வாடகை | 4,364,000 | 5,101,470 | 4,601,170 | 3, 386,564 | 4,987,000 | 5,099,370 | 4,936,452 | 2,890,264 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 511,650 | 1,235,323 | 920,363 | 339,185 | 335,100 | 537,888 | 519,950 | 24,225 |
| ஏனைய வருமானங்கள் (கட்டணங்கள்) | 7,767,000 | 8,654,861 | 8,636,601 | 75,905 | 7,282,000 | 6,838,194 | 6,821,475 | 63,305 |
| | 30,169,650 | 32,877,480 | 25,096,253 | 52,724,576 | 26,573,100 | 26,153,650 | 22,937,043 | 44,836,192 |

**2.2.2 வீதவரியும் வரியும்**

**வீதவரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 10,000 விட மிகையான நிலுவை மீதிகள் 395 வீதவரி அலகுகள் காணப்பட்டிருந்ததுடன், அறவிடப்பட வேண்டிய வீதவரித் தொகை ரூபா 7,898,707 தொகையாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பாதீட்டின் பிரகாரம் வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,340,543 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 219,935,594 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | உரிய உத்தியோகத்தரிடம் பெறவேண்டிய நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடப்பட வேண்டும். | பிரதான செயலாளரிடம் நிலுவை தொகையை பெற்றுக்கொள்ள கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது விதிக்கப்பட்டிருந்த துணை விதியின் படி சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செய்பணிகளுக்காக மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று சபையினால் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்ததை பெற்றிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஜனாதிபதி அவர்களின் 2017 ஏப்ரில் 20 திகதிய 2015/53 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வழிகாட்டலின் படி குப்பை சேகரிப்பதற்காக நீண்ட கால வேலைத்திட்டம் ஒன்று சபையிடம் காணப்படவில்லை. | குப்பை முகாமைத்துவம் முறைப்படி மேற்கொள்ளப்பட வேண்டும். | குப்பை முகாமைத்துவம் முறைப்படி மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| இரண்டாம் மட்டத்திலுள்ள 06 ஊழிய வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 14 மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| ஓய்வு பெற்ற மற்றும் கடமையாற்றும் இடத்தை இனங்காண முடியாத காரணத்தினால் 30 ஊழியர்களின் 10 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 445,392 தொகைக்கான கடன் மீதி மற்றும் 2017 ஆண்டில் வேலை இடைநிறுத்தப்பட்ட மின் தொழிநுட்பவியலாளர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 100,122 ற்கான கடன் மீதி என்பவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடன் மீதிகள் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | நிலுவை கடன் மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.3.1 பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளாமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2017 ஜூலை மாதத்தில் ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 240,000 பெறுமதியை உடைய டிரக்டர் வண்டியை திருத்த வேலையை மேற்கொண்டு ஓட்ட நிலைக்கு மாற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திருத்த வேலைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். | திருத்த வேலைகளை விரைவாக மேற்கொள்வேன். |

#### 3.3.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| உள்ளூராட்சி அமைச்சிலிருந்து வழங்கியிருந்த நீர் பவுசரின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமையை சபைக்கு உரித்தாக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரித்தாக்க நடவடிக்கை எடுப்பேன். |

4. **கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொண்டு அதன் அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொண்டு அறிக்கைகள் அனுப்ப நடவடிக்கை எடுப்பேன். |